## நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை - 2015

---

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செலாற்றல் கூற்று, தேறிய சொத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 17(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலாதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்தின் காரணமாக நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 அதிகாரசபையின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 16(3) ஆம் உப பிரிவில் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபையின் ஆரம்ப மூலதனம் ரூபா 5,000 மில்லியனாக இருக்க வேண்டியதுடன் அது பகுதிகளாக அரசாங்கத்தின் திரண்ட நிதியத்திலிருந்து செலுத்தப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டு பூர்த்தியடையும் வரை அதிகாரசபைக்கு எந்த மூலதனமும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 16(உ) உப பிரிவில் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் செலவு குறைந்த வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பணம் வழங்குவதவற்காக ஆதனங்கள் அபிவிருத்தி செய்பவர்களின் சேவைக் கட்டணமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் சேகரிக்கப்படும் அனைத்து பணமும் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நிதியத்திற்குச் செலவுவைக்கப்பட வேண்டிய போதிலும் 2010 திசெம்பர் 14 ஆந் திகதிய 10/2951/504/012 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இச் சேவைக் கட்டணத்தினை அறவிடுதல் நிறுத்தப்பட்டுள்ளமையினால் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய பிரதான வருமான மார்க்கம் இழக்கப்பட்டிருந்தது. இதன் படி திறைசேரியின் அல்லது அரசாங்கத்தின் ஏனைய நிதி உதவியின்றி அதிகாரசபையைத் நடாத்திச் செல்வதில் நிச்சயமற்ற நிலையொன்று காணப்பட்டது.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கை

பொதுத் திறைசேரியிலிருந்து மூலதன செலவினத்திற்காக அதிகாரசபைக்கு வருடாந்தம் வழங்கப்படுகின்ற அரசின் மானியம் தொடர்பாக பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அங்குலான வீடமைப்புச் செயற்திட்டத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,179,062,714 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின்

அடிப்படையில் திறைசேரி மானியத்தில் ரூபா 684,298,437 தொகை பதிவழிக்கப்பட்டமையால் நடைமுறையல்லாச் சொத்துக்கள் அந்த அளவால் குறைவாகக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) வங்கி நடைமுறைக் கணக்கிற்குரிய நேர்ச் செலவு ரூபா 1,199,250 தொகையை 12 மாத காலமாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அங்குலான வீடமைப்பு செயற்திட்டத்திற்காக அந்த செயற்திட்டத்துடன் இணைந்த 0.0508 ஹெட்டெயர் பரப்பளவான காணி ரூபா 5,020,516 செலுத்தி அதிகாரசபையால் கைப்பற்றப்பட்டிருந்தது. இந்த நிலையான சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் நடைமுறையல்லாச் சொத்துக்களில் காணியின் கீழ் தனியாக வெளிப்படுத்தப்படாமல் செயற்திட்டக் கிரயத்தில் சேர்க்கப்பட்டிருந்தது.

(ஈ) அதிகாரசபையின் துணைக் கம்பனியொன்றிலிருந்து அதிகாரசபைக்கு மீளாய்வாண்டின் போது கையளிக்கப்பட்ட 04 மோட்டார் வாகனங்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அதிகாரசபையின் அலுவலகக் கட்டிடத்தை பழுதுபார்ப்பதற்காக இலங்கை நில மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 3,891,911 தொகை உரிய நிறுவனத்தின் இணக்கப்பாடின்றி தீர்க்கப்படாமல் வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) ஆதனங்களை அபிவிருத்தி செய்பவர்களின் சேவைக் கட்டணமாக அதிகார சபைக்குக் கிடைக்க வேண்டிய பணம் ரூபா 207,331,767 நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் சேகரிக்கப்பட்டிருந்தது. இந்தப் பணம் முன்னைய வருடத்திற்குரியதாக இருந்த போதிலும், பிற்போட்ட ரீதியில் சீராக்கம் செய்யாது மீளாய்வாண்டின் போது வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

6 சுவசக்தி நிலையங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,675,608 பெறுமதியான கணணி மற்றும் தளபாட உபகரணங்கள் கையளிக்கப்பட்டமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான உபயோகிக்கப்பட்ட ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 200,091 கூட்டுத்தொகையான முற்பணத்தைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விசிறி வீடமைப்புக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் கிடைக்க வேண்டிய கடன் தவணைப் பணத்தின் பெறுமதி ரூபா 16,851,730 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடம் முதல் 2 வருடங்களுக்கிடையே மீதி 4,453,942 தொகையும், 2 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 7,000,739 தொகையும் காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய அங்குலான வீடமைப்பு கடன் தவணைப்பணம் ரூபா 7,525,619 ஆக இருந்த போதிலும் அதில் அறவிடப்பட்ட கடன் தவணைப் பணத்தின் பெறுமதி ரூபா 452,800 ஆனமையால் அறவிடப்படாத கடன் தவணைப்பணம் மொத்தக் கடன் தவணைப் பெறுமதியில் 93 சதவீதமாகும்.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியளவில் அதிகாரசபையினால் சமூக அடிப்படையிலான சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 11,105,000 தொகையினைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைகள்**

---

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச் சட்டம் | நகரக் குடியிருப்பு அபிவிருத்திற்குரிய தேசிய கொள்கையொன்றைத் தயாரிப்பதற்காகவும் அக் கொள்கையினை அமுல்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகவும் அதிகாரசபை தாபிக்கப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபை தாபிக்கப்பட்டு 7 வருடங்கள் கடந்திருந்த போதிலும், இதில் தேசியக் கொள்கையொன்றைத் தயாரிப்பதற்கும் அமுல்படுத்துவதற்கும் அதிகார சபை தவறியிருந்தது. |
| 10 ஆம் பிரிவு | அதிகாரசபையால் தலைவரை உள்ளடக்கிய 14 அங்கத்தவர்களுக்கு மேற்படாத மதியுரைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மதியுரைக் குழுவொன்று நியமிக்கப்படாமையின் காரணமாக, அதிகாரசபையின் முன்மொழிவுகள், திட்டங்கள், செயற்திட்டங்கள் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் போன்றவை அதிகார சபையின் நோக்கங்களுக்குரிய பணிகளை அங்கீகரிக்கும் போது அதற்காக ஆலோசனை வழங்கும் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 371 | முற்பணம் வழங்கப்பட்டதன் பின்னர் அந்த பணி நிறைவு பெற்றதும் உடனடியாக உரிய பற்றுச்சீட்டுக்களில் சமர்ப்பிக்கப்பட்டு முற்பணம் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், 84 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 1,098,362 கூட்டுத்தொகையான முற்பணத்தைத் தீர்ப்பதற்கு 01 மாதத்திற்கும் 05 மாதங்களுக்குமிடையிலான காலம் எடுத்திருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 756 | அதிகாரசபையால் வள நிலையங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,390,086 கூட்டுப்பெறுமதியான தளபாடங்கள், பிளாஸ்டிக் கதிரைகள், தையல் இயந்திரம் மற்றும் கணனி என்பன ஆண்டின் இறுதியிருப்பு மெய்மையாய்விற்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1982 இன் 45 ஆம் இலக்க தொகுதி வீட்டு உரிமை (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 20(ஏ) உப பிரிவு | அங்குலான வீடமைப்பு செயற்திட்டத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக முகாமைத்துவக் குழு உருவாக்கப்பட வேண்டிய போதிலும், உரிய |

முகாமைத்துவக் குழுவை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காது, அதற்காக வீட்டு நலனாளிகளிடமிருந்து அறவிட்ட ரூபா 11,105,000 தொகை அதிகாரசபையின் சேமிப்புக் கணக்கொன்றில் வைப்புச்செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு முகாமைத்துவக் குழுவை தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக வீடமைப்பு செயற்திட்டத்தின் பராமரிப்புச் செலவினத்திற்காக மீளாய்வாண்டின் போது அதிகாரசபைக்கு ஏற்கவேண்டியிருந்த செலவினம் ரூபா 1,972,786 ஆகும்.

(ஈ) 2007 பெப்ரவரி 22 ஆந் திகதிய அமப/07/0140/226/103 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம்

அதிகாரசபை உருவாக்கப்பட்டதும் உடனடியாக றியல் எக்ஸ்டேட் எக்ஸ்சேன்ஜ் (தனியார்) கம்பனி கலைக்கப்பட்டு அக் கம்பனியின் சொத்துக்களும் பொறுப்புக்களும் அதிகார சபைக்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கம்பனியைக் கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை

(i) 3.4.3 ஆம் பிரிவு

வழங்கல்களுக்காக வழங்குனர்களைப் பதிவு செய்யுமிடத்து அவர்களிடமிருந்து கூறு விலைப் கோரப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் மீளாய்வாண்டின் போது ரூபா 4,851,464 தொகை தளபாடங்களைக் கொள்வனவு செய்யும் போது பதிவு செய்யப்பட்ட வழங்குனர் ஒருவரிடமிருந்தும் பதிவு செய்யப்படாத 07 நிறுவனங்களிலிருந்தும் கூறு விலைகள் கோரப்பட்டிருந்தது.

(ii) 5.1.1 ஆம் பிரிவு

கூறு விலை கோரும் போது விடயங்களின் மாதிரிகள் தெளிவாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக கூறுகளை ஒப்பிடல் கடினமானதாக இருந்தது.
உதாரணம் மேசைகளின் பலகை வகை, கணனி மேசையின் அளவு

(iii) 5.4.5 ஆம் பிரிவு

இறக்குமதி உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் போது நிறுவகத்தின் பெயரில் நாணயக் கடிதம் விநியோகிப்பதற்காக மாத்திரம் 30 சதவீத முற்பணமொன்று வழங்குனருக்குச் செலுத்த முடியுமாக இருந்த போதிலும், அதிகார சபையினால் தளபாடங்கள் பெறப்படுவதற்கு முன்னர் 50 சதவீத முற்பணமாக ரூபா 2,420,636 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அவ்வாறான முற்பணமொன்று செலுத்த வேண்டியமை கொள்வனவு ஒப்பந்தங்களிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 போதியளவான அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டின் போது அதிகார சபையினால் ஊழியர்களுக்கு ரூபா 23.6 மில்லியன் வீடமைப்புக் கடன் வழங்கப்பட்டிருந்த போதிலும், பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி விசிறி கடன் செயற்திட்டத்தைக் அமுல்படுத்துவதற்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு இதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக அதிகாரசபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 207,344,767 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 10,284,599 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 217,629,366 அதிகரிப்புக் காணப்பட்டது. ஆதனங்களை அபிவிருத்தி செய்பவர்களிடமிருந்து சேவைக் கட்டணமாக முன்னைய ஆண்டுகளின் போது நகர அபிவிருத்தி அதிகார சபையினால் சேகரிக்கப்பட்டு அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 207,331,767 தொகையான சேவைக் கட்டண வருமானமொன்று மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்தமை நிதி விளைவுகளின் முன்னேற்றம் தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 57,276,732 தொகையான நிதி பற்றாக்குறையொன்று காணப்பட்ட போதிலும், 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 11,619,000 மற்றும் ரூபா 6,032,874 நிதி மிகை ஏற்பட்டிருந்தன. மீண்டும் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 10,284,599 தொகையான நிதிப் பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அது ரூபா 207,344,767 மிகையொன்றுக்கு உள்ளாகியிருந்தது. எவ்வாறாயினும், ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது நிறுவனத்தின் பங்களிப்பு 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 31,567,761 தொகையான மறைப் பெறுமதியைக் கொண்டிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டு முதல் அது நேர்ப் பெறுமதியாக தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 263,421,617 ஆக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் சேவைக்கட்டண வருமானம் 100 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் அது மொத்த வருமானத்தில் 62 சதவீதமாக இருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நடைமுறை விகிதம் மற்றும் தேறிய இலாப விகிதம் என்பன முறையே 87 சதவீதத்தாலும் 875 சதவீதத்தாலும் அதிகரித்திருந்ததுடன் ஆதனங்களை அபிவிருத்தி செய்பவர்களிடமிருந்து சேவைக் கட்டணமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் சேகரிக்கப்பட்டு அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 207,331,767 தொகை மீளாய்வாண்டின் போது வருமானத்திற்கு எடுத்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

நிலைபேறான நகர குடியிருப்பு அபிவிருத்தியொன்று ஏற்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் தற்போது காணப்படுகின்ற வீட்டு அலகுகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் அல்லது மிகவும் இலகுவான வீட்டு வசதிகள் மற்றும் ஆகக் குறைந்த நகர வசதிகளுக்கான நுழைவினை வழங்குதல் மூலம் சேவை வசதிகள் குறைந்த நகர குடியிருப்புக்களில் வாழ்கின்ற நபர்களின் வாழ்க்கைத் தரத்தைக் கட்டியெழுத்தல் 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் நோக்கங்களாகும்.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது 4,122 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்காக 07 செயற்திட்டங்களை உள்ளடக்கி 10 செயற்திட்டங்களுக்காக ரூபா 993 மில்லியன் செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதன் ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றல் ரூபா 449 மில்லியன் அதாவது 45 சதவீதமாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 190.52 மில்லியன் தொகையான 03 நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) திருகோணமலையில் குடும்பங்களை குடியமர்த்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் கீழ் 96 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 150 மில்லியன் தொகையான வேலைப் பகுதியை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதன் நிதி சார் முன்னேற்றம் ரூபா 25 மில்லியன் அதாவது 16 சதவீதமான குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

(ஈ) மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 50,000 குடும்ப அலகுகளுக்கு சேவையினை வழங்குவதற்கு ரூபா 23 மில்லியன் செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 4,190 அலகுகளுக்கு மாத்திரம் சேவை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட தொகையில் 99 சதவீதம் அதாவது ரூபா 22.76 மில்லியன் செலவிடப்பட்டிருந்தமை கணக்காய்வில் பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(உ) கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்படாத சமூக நேரலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் குறைவடைந்த வருமானம் பெறும் பெண் முயற்சியாளர்களுக்கு தையல் இயந்திரங்களை வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 12 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிங்ஹபுற வீடமைப்பு உத்தேசத்திட்டத்தின் கீழ் 14 வீடுகள் 05 வருட காலத்திற்காக மாதமொன்றிற்கு ரூபா 5,000 வீதம் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன், உடன்படிக்கையின் பிரகாரம் தொடர்ச்சியாக 03 மாத காலம் வாடகை செலுத்தாதுதிருப்பின் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட வேண்டிய போதிலும், 05 மாதம் முதல் 34 மாத காலத்திற்காக வாடகை செலுத்திருந்த 08 வீடுகளின் வாடகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 யூன் 27 ஆந் திகதி நடைபெற்ற 06/2014 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் 26 சுவசக்தி நிலையங்களை தாபிப்பதற்கு திர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த 12 நிலையங்கள் தாபிக்கப்படாமல் அதற்குப் பதிலாக 11 வேறு நிலையங்கள் தாபிக்கப்பட்டிருந்தன.

### 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திரிய வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 435 கடன் பெறுநர்களுக்காக ரூபா 76,165,000 தொகை விடுவிக்கப்பட்டிருந்தது. கடன் வழங்குவதற்குரிய கடன் பேரேடு நாளதுவரையாக்கப்படாதிருந்ததுடன் பணப் பெறுவனவுகளின் பற்றுச் சீட்டுக்களின் பிரதியொன்று, பிணையாளரின் அடையாள அட்டை விபரங்கள் கடன் கோவைகளில்

உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கிராம உத்தியோகத்தர் உறுதிப்படுத்தாமல் கடன் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களும் சத்தியப் பிரமாணங்கள் பூர்த்தி செய்யப்படாதிருந்த சந்தர்ப்பங்களும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(ஆ) பெறுமதிகள் முறையே ரூபா 58,594,359 மற்றும் ரூபா 34,500,000 தொகையான துறுஇதுறுகம மற்றும் 48 ஆம் தோட்ட வீடமைப்பு செயற்திட்டங்களின் சட்டரீதியான உரித்து மீளாய்வாண்டின் இறுதிவரையும் அதிகாரசபைக்குக் கையளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபையால் 10 சதவீத தரகுப் பணமாக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 823,534 தொகையொன்று கடன் சேகரிப்பாளருக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அங்குலான வீடமைப்பு கடன் மற்றும் திரிய வீடமைப்புக் கடன் என்பவற்றின் முதலாவது கட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் கடன் அறவிடும் செயல் முன்னேற்றம் முறையே 6 சதவீதம் மற்றும் 48 சதவீதம் ஆன குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தன.

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

விசிறி வீடமைப்புக் கடன் வழங்குவதற்காக 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை அமைச்சிலிருந்து ரூபா 90 மில்லியன் கிடைத்திருந்ததுடன் அதில் முதலாவது கட்டத்தின் போது ரூபா 46.23 மில்லியன் தொகையும், இரண்டாவது கட்டத்தின் போது ரூபா 34.60 மில்லியன் தொகையும் விசிறி கடனாக வழங்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா 9.17 மில்லியன் தொகை வேறு பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 4.5 வெளிப்படையான மோசடிகள்

மீளாய்வாணடின் இறுதி வரையிலும் நகர பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்ற குறைந்த வருமானம் பெறுபவர்களின் வாழ்க்கை மட்டத்தை மேலோங்கச் செய்வதற்காக பொதுத் திறைசேரியின் மூலம் 2011 ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை பல்வேறு செயற்திட்டங்களுக்காக ரூபா 508 மில்லியன் அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதிகாரசபையினால் பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி பணிப்பாளர் சபை தீர்மானத்தின் அடிப்படையில் பல்வேறு செயற்திட்டங்கள் ஊடாக குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வழங்கப்பட்ட நிதி மற்றும் பொருள் உதவிகளின் பெறுமதிகளை நலனாளிகளிடமிருந்து மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவ்வாறு குறைந்த வருமானம் பெறுபவர்களிடமிருந்து அறவிடப்பட்டுள்ள தவணைப்பணம் மற்றும் வட்டி என்பவற்றின் பெறுமதி ரூபா 23,287,518 ஆகும்.

## 4.6 நிதியத்தின் குறைவான பயன்பாடு

2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை பொதுத் திறைசேரியிலிருந்து செயற்திட்டத்திற்காக ரூபா 1,407 மில்லியன் தொகை கிடைத்திருந்ததுடன் அந்த செயற்திட்டத்திற்காக ரூபா 1,341 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் செயற்திட்டத்திற்காக கிடைத்திருந்த நிதியிலிருந்து ரூபா 66 மில்லியன் அச் செயற்திட்டத்திற்காக செலவிடப்படாது அதிகாரசபை நிறுத்தி வைத்திருந்ததுடன் எஞ்சிய நிதி பொதுத் திறைசேரிக்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அனுப்பப்பட்டிருக்கவில்லை.

## 4.7 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டின் மே வரையிலும் இரண்டு சுவசக்தி நிலையங்களுக்காக ரூபா 618,115 பெறுமதியிலான கணணியும் உப பாகங்களும் வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கணனி வகுப்பு

ஆரம்பிக்கப்படாமையின் காரணமாக அந்தக் கணனி பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது குறைந்த பயன்பாட்டுடன் காணப்பட்டது. அவ்வாறே பொருட்களின் சேவை உத்தரவாதக் காலமும் முடிவடைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது அதிகாரசபைக்குச் சொந்தமான ஜீப் வண்டியொன்றைப் பழுது பார்ப்பதற்காக ரூபா 540,911 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், பழுதுபார்த்தலின் பின்னர் 06 மாதம் ஓட்டத்தில் பயன்படுத்தப்படாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) சிலாபம் வீடமைப்புத்திட்டத்தில் செங்கல் உற்பத்திக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,150,000 பெறுமதியான 06 இயந்திரங்கள் முன்னைய ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையும் பாவனைக்கு எடுக்கப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

(ஈ) சிங்ஹபுர வீடமைப்புத் திட்டத்தில் 70/37/4/1 ஆம் இலக்க வீடு 2012 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது மூடி வைக்கப்பட்டிருந்தது.

**4.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

''சீதாவாக்க வீடமைப்புத் திட்டம்'' ஆரம்பித்தல் விழா மற்றும் ''ஜனசெவன ஸ்வசக்தி'' சமூக வள நிலையத்தை தாபிக்கும் தொடக்க விழா என்பவற்றுக்கான பத்திரிகை அறிவித்தலை பிரசுரிப்பதற்காக மீளாய்வாண்டில் ரூபா 1,231,552 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**4.9 கொள்வனவு நடவடிக்கைகளும் ஒப்பந்த நிர்வாகமும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்குலான வீடமைப்புத் தொகுதியை நிர்மாணிக்கின்ற ஒப்பந்தக்காரருக்கு 20 சதவீதமான வேலை ஆரம்பிப்பு முற்பணங்களுக்கு மேலதிகமாகவும், ஒப்பந்த ஏற்பாடுகளின் மூலம் இணங்காத ரூபா 85 மில்லியன் தொகை மூலப்பொருட்களை கொள்வனவு செய்யும் முற்பணமாக அதிகாரசபையின் மூலம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) உரிய அமைச்சிலிருந்தும் பொதுத் திறைசேரியிலிருந்தும் தேவையான நிதி ஏற்பாடு வழங்கப்படாது திருகோணமலை பிரதேசத்திலும் சீதாவாக்க பிரதேசத்திலும் நிர்மாணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்ட வீடமைப்பு செயற்திட்டத்திற்காக அதிகாரசபையினால் முறையே ரூபா 747,754 தொகை மற்றும் ரூபா 2,395,289 தொகையான செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இந்த வீடமைப்பு செயற்திட்டம் இடையில் நிறுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(இ) நகரத்தில் குறைந்த வருமானம் பெறும் சமூகத்திற்காக 466 மலசல கூடங்களை அமைத்து பூர்த்தி செய்வதற்காக ரூபா 15,000 தொகையான பொருள் ரீதியான உதவியும், ரூபா 10,000 தொகையான நிதி ரீதியான உதவியும் ஆக ரூபா 6.1 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மலசல கூடம் நிர்மாணிப்பதற்காக அம்பாந்தோட்டை மாவட்டம் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த மாவட்டம் மாத்திரம் தெரிவு செய்யப்பட்ட அடிப்படை கணக்காய்வின் போது தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை. அதிகாரசபைக்கும் நலனாளிகளுக்குமிடையே காணப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஒரு மாதத்திற்குள் மலசலகூடத்தை அமைத்து பூர்த்தி செய்ய வேண்டியிருந்ததுடன் அவ்வாறிலலையெனின் வழங்கப்பட்ட பணம் மற்றும் கட்டிடப் பொருட்களின் பெறுமதி என்பவற்றைக் கடனாகக் கருதி நலனாளியால் அதிகாரசபைக்கு ஒரே தடவையில் செலுத்த வேண்டும். எனினும், மலசலகூடம் உண்மையாக அமைக்கப்படாதிருந்தமையை கண்டறிவதற்கான முறைமையொன்று அதிகாரசபையிடம் காணப்படவில்லை. 8 நலனாளிகளுக்கு நிதிசார் உதவிகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்த போதிலும்

உடன்படிக்கையின் பிரகாரம் மலசலகூடம் அமைக்கப்படாமையினால் அந்த பணத்தை அறவிடுவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.10 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்**

மீளாய்வாண்டின் போது அதிகாரசபை வரிசை அமைச்சிற்கு விடுவித்த இரண்டு உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 306,830 தொகையைச் செலுத்தியிருந்தது.

**4.11 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 111 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 119 ஆனமையால் வெற்றிடங்கள் 15 ஆகவும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சிய ஆட்சேர்த்தல்கள் 21 ஆகவும் இருந்தன.

(ஆ) அதிகாரசபையில் 02 பொறியியலாளர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த பதவி வெற்றிடமாக காணப்படுகின்றமையால் நிர்மாண நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் அதிகாரசபைக்கு அதன் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு முடியாத நிலையொன்று ஏற்பட்டிருந்தது.

(இ) அதிகாரசபையின் பிரதான பதவியான பணிப்பாளர் (திட்டமிடல்) பதவி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் 2016 யூன் வரையிலும் அப் பதவிக்காக உத்தியோகத்தரொருவரைச் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 இன் பிரகாரம் நிறுவனத்தில் தற்போது காணப்படுகின்ற வளங்கள், கடந்த மூன்று வருடங்களின் செயற்பாட்டு விளைவுகளின் முன்னேற்றம், கூட்டிணைந்த திட்டத்தில் அந்தந்த பணிகளுக்காக பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களைக் கண்டறிதல் போன்ற தகவல்களை உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்பாடுகளில் நிறைவேற்ற வேண்டிய அளவில் அந்தந்த பணிகளுக்காக பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் செயலாற்றல் மதிப்பீட்டிற்கான குறிகாட்டிகள் (Indicators) சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் அமைப்பு வரைபடத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி மத்திய தரத்தின் பதவியொன்றானமையின் காரணமாக கணக்காய்வின் செயலாற்றலுக்கும் சுயாதீனத் தன்மைக்கும் நேரடியாகத் தாக்கமளித்திருந்தது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் கணக்காய்வு பிரிவிற்காக உள்ளகக் கணக்காய்வாளர் பதவி மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் பிரிவின் நடவடிக்கைகளுக்காக அதிகாரசபையின் முகாமைத்துவ உதவியாளர் சேவையில் இரண்டு உத்தியோகத்தர்களின் உதவி பெறப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட சமூகப் பங்குபற்றல் நிர்மாணம், நேரடி நிர்மாணங்களுக்குரிய கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் போதியளவாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபையின் செயலாற்றல் மதிப்பீட்டிற்குரிய நிகழ்ச்சித்திட்டங்கள், கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

2015 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட வருமானமும் சில செலவின விடயங்களும் பாதீடு செய்யப்படாதிருந்ததுடன் பாதீடு செய்யப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பீடு செய்த போது 20 சதவீதம் முதல் 200 சதவீதம் வரை முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.5 ஆண்டறிக்கை சபைக்குச் சமர்ப்பித்தல்

2013 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தினால் உள்ளபடியான ஆண்டறிக்கை கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதிகார சபையால் 2013 ஆம் ஆண்டு முதல் ஆண்டறிக்கை பாரளுமன்றத்தில் சமர்ப்பபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட அவதானம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) சொத்துக்களின் கிரயத்தை சரியாக கணக்கீடு செய்யாமையின் காரணமாக அவற்றின் பெறுமதி குறைவாகக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) நிதி முகாமைத்துவம் | (i) உரிய பணி நிறைவு பெற்றதும் உடனடியாக முற்பணத்தைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக கிடைக்கப் பெற்ற அரசாங்க மானியம் அந்த நோக்கங்களுக்குப் புறம்பான நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அரசாங்க மானியங்களிலிருந்து செலவிடப்படாத மீதியை திறைசேரிக்கு மீள அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | பதவியணியினர் நிர்வாகம் | அதிகாரசபையின் பிரதான பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும், சில பதவிகள் சரியாக தரப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | ஒப்பந்த நிர்வாகம் | மீளாய்வாண்டில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த சில செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களில் குறைவானதொரு செயலாற்றலொன்று அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவைக்கு முரணாக சில கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (உ) | கடன் கட்டுப்பாடு | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கடன் தவணைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் கடனை அறவிடும் செயல்முன்னேற்றம் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. |